ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2105/38 - 2019 ජනවාරි මස 10 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.01.10

*2105/38 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டம்*

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரினால் வாசிக்கப்பட்ட 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒழுங்கு விதிகளும் அவை சார்ந்த மாற்றங்களும்.*

ஹரின் பெர்னாண்டோ,
தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு
மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்.

கொழும்பு,
2019, சனவரி 09.

ஒழுங்குவிதிகள்

தேசிய விளையாட்டுச் சங்கங்கள் சம்பந்தமாக 1990/23 ஆம் இலக்க 2016.10.27 ஆந் திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கத்தின் ஒழுங்குவிதிகள், 2017.02.13 ஆந் திகதியிடப்பட்ட 2006/13 ஆம் இலக்கத்தின் ஒழுங்குவிதிகள், 2017.05.05 ஆந் திகதியிடப்பட்ட 2017/41 ஆம் இலக்கத்தின் ஒழுங்குவிதிகள், 2018.09.22 ஆந் திகதியிடப்பட்ட 2089/56 ஆம் இலக்கத்தின் ஒழுங்குவிதிகள் மற்றும் 2018.10.18 ஆந் திகதியிடப்பட்ட 2093/39 ஆம் இலக்கத்தின் ஒழுங்குவிதிகள் பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகிறது.

1. 2018.09.22 ஆந் திகதியிடப்பட்ட 2089/56 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 3(எ) இன் ஒழுங்குவிதி அகற்றப்பட்டு பின்வரும் ஒழுங்குவிதி அதற்குப் பதிலாக மாற்றியமைக்கப்படுகிறது :

"3(எ) மேற்குறிப்பிட்ட தேர்தல் குழுக் கூட்டம் நடைபெற்றதையடுத்து ; தேர்தல் கூட்டம் நடைபெற்ற தினத்திலிருந்து இரண்டு மாத கால எல்லைக்குள் பெயர்ப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்."

1A - PG 4353 — 517 (2019/01)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*2. 2018.09.22 ஆந் திகதியிடப்பட்ட 2089/56 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 8(2) இன் ஒழுங்குவிதி அகற்றப்பட்டு பின்வரும் ஒழுங்குவிதி அதற்குப் பதிலாக மாற்றியமைக்கப்படுகிறது :*

*"8(2) விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பான அமைச்சரினூடாக மேன்முறையீட்டை பரிசீலித்ததின் பின் ;* A *மற்றும்* B *வகுப்புக்களின் குழுவிற்கு உச்ச நீதிமன்றத்தில் ஓய்வுபெற்ற நீதிபதி அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஓய்வுபெற்ற நீதிபதியினால் மட்டுமே தலைவராக இருக்க முடியும் மற்றும் ஓய்வுபெற்ற சிரேஷ்ட அரசாங்க உத்தியோகத்தர் மூவர் ஆலோசனைக் குழுவிற்கும் மற்றும்* C *வகுப்பின் குழுவிற்கு ஓய்வுபெற்ற சிரேட்ட அரச உத்தியோகத்தர்கள் மூவர் சமனாவதுடன், இக்குழுவிற்கு மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கும் பட்சத்தில் அம்மேன்முறையீட்டை ஒரு வாரத்திற்குள் (7 நாட்களில்) எழுத்து மூலம் அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்."*

*01-650*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*